உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத் சந்த்ர சூடாம்பிகா ஸமேத ஸ்ரீராமலிங்க ஸ்வாமினே நம:

OF THE ... 10 JUL 925 MA...

# தேவாங்க புராண வசனம்.

## இரண்டாம் பாகம்.

இஃது

சேலம் ஜில்லா ஜலகண்டபுரம்,
ஸ்ரீ சன்மார்க்கசபை அங்கத்தினரும் பாபிசெட்டியூர்
ஸ்ரீ ராமலிங்க சவுடாம்பிகா தேவஸ்தான
அர்ச்சகருமாகிய,
வீ. தம்மண்ணா சாஸ்திரியாரால்
எழுதப்பட்டு ஷெயார் ஆசிரியராகிய தோரமங்கலம்
கர்ணம் தமிழ்ப்பண்டிதர்
அ. வரதநஞ்சைய பிள்ளை,
அவர்களால் பார்வையிடப்பட்டு

ஜலகண்டபுரம் பாபிசெட்டியூர் ஸ்ரீ ராமலிங்க
சவுடாம்பிகா தேவஸ்தான தற்கால தர்மகர்த்தா
சே. க. இரங்கசாமி செட்டியார் அவர்கள்
பொருளுதவியால்
ஈரோடு
ஸ்ரீ கிருஷ்ணா அச்சாபீஸில்
பதிப்பிக்கப்பட்டது.

**1925.**

...ரோ... வரு சித்திரை-மீ

...டிய சீக்கிரம் வெளிவரும்

உ

மிகுந்த உபயோமுள்ள சாமான்கள் குறைந்த விலைக்கு வேண்மோ?

# ஜெர்மன் எலக்டரிக் லாம்பு.

இதற்குவேண்டிய பல்ப்பு, பாட்டரியுடன் ரூ 2-தான். தனி பாட்டரி அணா 10. ஜெர்மன்சிகள் லைடர் 12-அணா 14-அணா ஷெி ப்ரிங்டாப் ரூ 1—௮—0 இன்னும் தங்களுக்குத் தேவையான எந்த சாமான்களும் எழுதினால் ஸ்டாக்கிலிருந்தாவது சுவல்ப கமிஷனுக்கு நீங்களாக நேரில் தரிவிப்பதைக்காட்டிலும் அதிக நயமாய் தருவித்துக் கொடுக்கப்படும். ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

இன்றே ஆடர் கொடுங்கள்.

விலாசம்.

அ. ப. அர்த்தநாரி,
ஷாப், ஜலகண்டபுரம், சேலம் ஜில்லா.

A. P. ARTHANARI,
Shop, Jalakantapuram, (Salem-Dt.)

## ஸ்ரீ கிருஷ்ணா & கோ, ஈரோடு.

எங்களிடம் வியாபாரிகளுக்கு வேண்டிய குறிப்பு, பேரேடு முதலிய கணக்குப் புஸ்தகங்கள் உறுதியானதாய் ஆர்டர்பயிண்டில் கிடைக்கும்.

ஆர்டரின்பேரிலும் தயார்செய்து கொடுக்கப்படும்.

எங்கள் அச்சாபீஸில், லெட்டர்பேப்பர், பட்டியல் முதலிய சகலவிதமான அச்சுவேலைகள் சுத்தமாகவும், சரசமாகவும், செய்து கொடுக்கப்படும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## நான்காவது அத்தியாயம்.

### சுநாபோபாக்யானம்.

சுவாமி! காவலாகிய தேவலரே! பூர்வத்தில் சாவித்திரன் என்ற எட்டாவது வசுவானவன் மிகுந்த பக்தி சிரத்தையுடன் சைவாகம விதிப்படி சிவபெருமானைப் பூசித்து வழிபடுபவன். அவன் ஒரு நாள் தன்னை அநேக ஆபரணங்களால் அலங்கரித்து நவரத்ன கசிதமான கிரீடத்தைச் சிரத்திற் சூடி இரண்டு புஜங்களுக்கும் புஜகீர்த்தி தரித்து ஆரகேயூர கடக கங்கணங்களை அணிந்தவனாய் திவ்யமான அழகிய விமான மிவர்ந்து சிவதெரிசனார்த்தம் திருக்கயிலாயம் சென்றான். அங்கு விந்தை மிகுந்த சந்திரபுஷ்கரணி யென்னும் பெயருடைய தடாகத்தைக்கண்டான். அந்தத் தடாகத்தில் ஸ்திரீகளினுடைய முகத்தைப் போன்ற செந்தாமரை மலர்கள் மலர்ந்திருப்பதையும் அதன் மகரந்தப் பொடிகள் சிந்த வண்டுகளானது தேனையுண்டு களிமிகக்கொண்டு கீதங்களைப் பாடவும் உன்னத முடைய அன்னப்பறவைகளும் நீர்க்கோழிகளும் தந்தம் பெட்டைகளுடன் கூடிக் குலாவி யிருப்பதையும் எப்பொழுதும் பூங்காவனத்தைவிட்டு நீங்காத குயிலினங்கள் தம் பேடைகளுடன் கூடிக்கொண்டு கீதங்களைப் பாடவும் மயிலினங்கள் தங்கள் அழகிய தோகைகளை விரித்து நின்றாடவும் சம்பங்கி புஷ்பங்களின் மணமும் ஜாதி புஷ்பங்களின் வாசனையும் பரிமளிக்க இளந்தென்றலானது இனிமையாய்த்தேகத்திற்றாக்கவும் மன்மதனுடைய பஞ்சபாணங்கள் நெஞ்சையுருக்கச்சாவித்திரன் காமலாகிரி தலைக்கொண்டவனாய் ஓ-காமனே! நீசற்றும் நேமமின்றி யாதொரு குற்றமுமற்றவனாகிய என்மீது வெற்றியுற்றிட மலர்க்கணைகளை விடுப்ப

181670



தடுக்காது சற்று தயை செய்து உன் பாணங்களை என்மீது விடுக்காதே, என்னைக்கெடுக்காதே! துன்பங் கொடுக்காதே! வயிரந் தொடுக்காதே என்று பற்பல வார்த்தைகள் புகன்று விரகதாபமுடையவனாய் அங்கு நான்கு திசையும் சுற்றிப்பார்க்க ஓர் பெண் * ஞமலியானது வரக்கண்டு தன் மாயையால் நவ யௌவன சுந்தரமுடைய பெண்ணாக்கி அவளைச் சேர்ந்த மாத்திரத்தில் ஓர் புத்திரன் பிறந்தான். பிறந்தவுடன் அந்தப்பெண்ணுரு முன்போல ஞமலியாகிக் காட்டின் பக்கம் வாலையாட்டிக் கொண்டோட்டமெடுத்தது. பின்பு அந்த வசு சித்திரத்தை யொத்த அருமைப் புத்திரனை மெத்தவும் பத்திரமாக எடுத்து முத்தங்கொடுத்து விமானத்தை யடுத்து அதன்மேலிவர்ந்து தன் பட்டினத்தில் வந்து சேர்ந்தான். அவன் தன் பத்தினிமாரிருவரிடம் அந்தக் குழந்தையைக் கொடுக்க அவர்கள் அம்மகவைப் பாராட்டி, சீராட்டி, பாலூட்டி, நீராட்டி. மைதீட்டி, தொட்டிலிலிட்டாட்டி அன்பாய் இன்பாய் தெம்பாய் அம்புவி போற்றும் உம்பர்களைக் கொண்டு உருக்மாதன் என்று நாமகரணம் செய்து வளர்த்து வந்தனர். உருக்குமாதனுக்கு வயது வந்தவுடன் அவன் தவஞ்செய்ய வேண்டுமென எண்ணினவனாய் மயேந்திரகிரியை நண்ணி நல்ல தலத்தைச் சுத்தி பண்ணி நியமமாரம்பித்துப் பிரம்ம தேவனை நோக்கித் தவஞ்செய்தான். அவன் நற்றவத்திற்கிரங்கி அன்னவாகனத்தில் பிரமதேவர் பிரசன்னமாகி நின்றதைக் கண்ட ருக்மாதன் பலவிதமாகப் பிதாமகனைத் தோத்திரம் புரிய அயன் உருக்மாதனைப் பார்த்து அன்பனே! உன் தவத்திற்கு மகிழ்ந்தனம் என்ன வரம் வேண்டுமென்று வினவ உருக்மாதன் அதி வினயத்துடன் அம்சவாகனனைப் பணிந்து சுவாமி! யான் எந்தப் பூதங்களினாலும் இறவாதிருக்க வரந்தால் வேண்டுமென வேண்ட அப்படியே தந்தோமெ

* ஞமலி=நாய

Q 23:222 N25

ன்று பிரம்மதேவர் மறைந்தார். பின்பு உருக்மரதன் தபோபலத்தினுல் சற்று மமதையுடையவனுய் எங்கும் சஞ்சரித்துக்கொண்டு வந்தவன் ஒரு நாள் விஸ்வகர்மா விடஞ்சென்று எனக்கு மயேந்திர கிரியின்மேல் ஒரு உன்னதமான நகரமுண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்க விஸ்வகர்மா அவ்வாக்கியத்தைத் திரஸ்கரித்தான் உருக்மரதன் தன் வார்த்தையை மறுத்ததை மனதிற்கொண்டு அவனுடன் யுத்தஞ்செய்ய ஆயத்தப்பட்டுச் செல்ல விஸ்வகர்மாவும் யுத்தசன்னத்தனுய் வந்தெதிர்த்துச் சாபம் வளைத்துக் கோபம் மிகுத்துக் கடுவிடம்போன்ற சுடுசரம் விடுத்துக் கோரமாக அபாரமாகிய சமர்விளைத்து உருக்மரதனுடன் யுத்தம் செய்யமாட்டாமல் விஸ்வகர்மா மிகவுங்களைத்து சோபத்தாலிளைத்துச் சத்துருவாகிய உருக்மரதன் தபோபலமுடையவனென மதித்துச் சண்டையை விடுத்துச் சமாதானமடுத்து உருக்மரதனுடைய இஷ்டப்படிக்கு மயேந்திர கிரியின் மேல் பட்டணமுண்டாக்கித் தந்தான். அந்தப்பட்டணத்திற்கு இலட்சுமீ வர்த்தனம் என்ற பெயரிட்டு அந்தப் பட்டணத்திலிருந்துகொண்டு என் தகப்பனுகிய உருக்மரதன் கந்தர்வர்களுக்கு அரசனுகி இராஜ்ஜிய பரிபாலனம் செய்து கொண்டு வந்தார். இப்படியிருக்கத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் சம்பவித்தது. தேவர்கள் என் தந்தையை அழைத்துக் கொண்டு போய் சண்டை செய்து அநேக அரக்கர்களின் மண்டைகளையுடைத்து வெற்றி மாலை சூடி வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் என் தந்தையார் விந்தையாகக் கந்தர்வர்களைக் கூட்டிக்கொண்டு பாரிஜாத பர்வதத்திற்கு வேட்டைக்குச்செல்ல அங்கு ஒரு சோலையில் ஒய்யாரமாக நிற்கின்ற தையலர் திலகமாகிய சுந்தராங்கியைக்கண்டு மையல் மிகக்கொண்டு பெண்மணி! நீ யார்? உன்பெயரென்ன? உன் தந்தையின் பெயரென்ன? என்று வினுவிய உருக்மரதனைப் பார்த்து அந்த மாதுசிரோன்மணி ஐயா!

நான் கந்தர்வராஜனுகிய ஏமமாலியின் புத்திரி என் தந்தை விலாச நகரமென்னும் பட்டணத்தை அரசாண்டு வருகிருர். என் பெயர் பத்மகோமளே யென்று சொல்லுவார்கள் என்று கூறி தன் தாதிமார்களுடன் தன் பட்டணத்திற்குச் சென்ருள்.

வேட்டைக்குவந்த உருக்மாதன் பத்ம கோமளேயின் ஆசையில் மாட்டிக்கொண்டவனுய் சைனியங்களைக் கூட்டிக்கொண்டு நாட்டைச்சார்ந்து நகரிர்புகுந்து தன் மந்திரிமார்களை ஏமமாலியிடம் பெண் கேட்க அனுப்பினுன் அந்தத்தந்திரமிகுந்த மந்திரிமார்கள் விலாச நகரைச்சேர்ந்து ஏமமாலியிடம் தங்கள் அரசனுகிய உருக்மாதன் பெண் விஷயமாகக்கூறிய சங்கதிகளைச் சொல்லஏமமாலிகேட்டுமந்திரிமார்களை நோக்கி ஓ,பிரதானிகளே! தேவகந்தர்வர்களுக்கு யோக்யதையாகிய பாக்கியவதியான என் குமார்த்தியை துற்புத்தியாகிய உருக்மாதன் எப்படி கேட்டான்? என்று நிராகரித்துப் பேசிய ஏமமாலியின் வாசகத்தைக் கேட்ட மந்திரிமார்கள் உடனே புறப்பட்டு வந்து தங்கள் அரசனுக்கறிவிக்க உருக்மாதன் சினமேற்கொண்டு மனமிக நொந்து ஓய் மந்திரிமார்களே, அந்த ஏமமாலியின் மேற்படையெடுங்கள் விலாச நகரத்திற்குச் சதுரங்க சேனைகளுடன் புறப்படுங்கள். இரதத்தைக்கொண்டு வாருங்கள் சடுதியில் வேலையைப்பாருங்கள் என்று சொன்னமாத்திரத்தில் சாரதியானவன் இரதத்தைக் கொண்டுவர சதுரங்கசேனைகள் சூழத் தேரிலேறிக்கொண்டு துரிதமாய் விலாச நகரை அடைந்து ஏமமாலியைத் தாமதமின்றி யுத்தத்திற்கழைக்க ஏமமாலியும் தன் சைனியங்களுடன் அமர்க்களமடைய இருதிரச்சேனைகளும் கைக்கலந்து கலகம் விளைக்க உருக்மாதனும் ஏமமாலியும் வில்லை வளைத்துப் பல்லை நற நற வென்று கடித்து மீசைதுடிக்க வீரவார்த்தைகளைப் படித்துக் கூரம்புகளை விடுத்துக் கோரமாகிய சமர்விளைக்க ஏமமாலி மெய் சோர்ந்து கைசோர்ந்து மூர்ச்சையாய் விழுந்தான் அதைக்

கண்ட உருக்மரதன் ஏமமாலியின் அருகிற்சென்று சைத்யோபசாரம் செய்ய ஏமமாலி மூர்ச்சைத் தெளிந்து கண்திறந்து பார்த்து உருக்மரதன் தனக்கு உபசரிப்பதைக் கண்டு சந்தோஷங்கொண்டு ஐயா? மகாபிரபுவே? உனக்கு என் அருமைப் புதியாகிய பத்மகோமளையை மணஞ்செய்து தருகிறேனென்று தன் நகரத்திற் கழைத்துக் கொண்டு போய் பட்டணத்தை யலங்கரித்து நல்ல சுபமுகூர்த்தத்தில் விவாகம் செய்து கொடுத்தான் பின்பு உருக்மரதன் பத்மகோமளையுடன் புறப்பட்டுத்தன் பட்டணமாகிய இலக்ஷ்மீவர்த்தன மடைந்து பத்மகோமளையுடன் கூடிவாழ்ந்தினி திருந்தாள் அந்த உருக்மரதனுக்கும் பத்மகோமளைக்கும் நான் பிறந்தேன். என் பெயர் சுவர்ணகேது வென்று சொல்வார்கள் யான் ஒருநாள் என்மனைவியாகிய சித்திரரேகையுடன் புறப்பட்டு விமானமேறித்திருக் கயிலைக்குச் செல்ல அங்கு ஒரு பூஞ்சோலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் கிரீடித்துக் கொண்டிருக்க யான் அறியாமலங்குச் சென்றேன் என்னைச் சிவபெருமான் பார்த்துக் கோபித்தவராய் நீ? எதற்காக இங்குவந்தாய் உன்புஜபலபராக்கிரமம் குறைத்து நீ மானிடனாகக் கடவாய் உன் பெண்ஜாதியும் மனிதப் பிறவியடைந்து மனைவியாகக்கடவள் என்று சபித்தார். அந்தக் கோரமாகிய சாபத்தைத் தாங்கிப்பயந்து பார்வதி நாதன் பாதங்களில் பன்முறை விழுந்தெழுந்து நமஸ்கரித்துக் கருணாகரா? பரமதயாளா? பக்தபராதீனா? பசுபதி? பேரமட்டி? அடியேன் அறியாமற் செய்த குற்றத்தை மன்னித்துச் சாபவிமோசனம் செய்யவேண்டுமென்று அழுதகண்ணுந் தொழுதகையுமாக நின்ற என்னை எம்பெருமான் பார்த்து உலகோபகாரமாய் என்னிடம் தேவாங்கமுனிவன் பிறப்பான் அவன் நீ, அரசாளும் பட்டணத்திற்கு வருவான் வந்தால் உன்னுடைய சாபம் அப்பொழுதே நீங்கிவிடும் என்று பரமேஸ்வரர் அனுக்கிரகம் செய்து அம்பிகையாருடன்

ஆயமடைந்தார். நான் ஆமோத நகரத்திற் கரசனாகிய பத்திரபாகுவுக்கும் அவன் மனைவியாகிய மகிக்கும் மைந்தனாய்ப்பிறந்தேன் என்னை சுநாபன் என்று அழைப்பார்கள் என்னுடைய பத்தினி காசிராசன் புத்திரி கலாவதியென்னும் பெயரையுடையவள் என் விருத்தாந்தத்தை நீர் வினவியதால் விரிவாகக்கூறினேன் உம்முடைய தெரிசனத்தால் என் சாபம் நீங்கிற்றென்று சொல்லவும் உடனே சுநாபன் மனிததேகம் நீங்கித் திவ்யதேக மடைய அவன் மனைவியுந் திவ்யதேகமடைந்து விமான மேறித் தேவலரிடம் விடைபெற்றுக் கொண்டு கந்தர்வலோகம் சென்றார்கள் என்று பிரம்மதேவர் நாரதமுனிவருக்குக் கூறிப்பின்னும் சொல்லத் தொடங்கினார்

4-வது அத்தியாயம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## ஐந்தாவது அத்தியாயம்

யக்ஷோபாக்யானம்

நாரதரைப் பார்த்து நான்முகக்கடவுள் நவிலலாயினார் ஓநாரதரே? தேவாங்கமுனிவர் வஸ்திரநிர்மாணம் செய்யும் விசாரமுடையவராய் மந்திரி பிரதானிகளை அழைத்து ஓ மந்திரிமார்களே? நான் வஸ்திரம் நெய்ய வேண்டியிருப்பதால் எல்லா சாமான்களையும் சேக

ரம் செய்ய வேண்டும் 'இப்பொழுது நான் மேருபர்வத்திற்குப் போய் அவ்விடமிருக்கும் துவஷ்டா புத்திரனாகிய மயனிடம் நெய்வதற்கு பயோகமாகிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொன்ன தேவலமுனிவருடைய வார்த்தையைக் கேட்டுமந்திரிபிரதானிகள்சொல்லுகின்றார்கள்.மகாராஜாவே? நீர் மாத்திரம் தனியே என் போகின்றீர் நாங்களும் சதுரங்க சேனைகளுடன் புறப்பட்டு வருகின்றோம் என்று அமைச்சர்கள் சொல்லிய வார்த்தையைக் கேட்டுத் தேவலர் ஒ அமைச்சர்களே?நீங்களும் என்னுடன் புறப்பட்டு வந்துவிட்டால் இந்த ராஜ்யத்தை யார் பரிபாலனம் செய்வார்கள் ஆகையால் நீங்கள் பட்டணத்தில் நீதி செலுத்திக் கொண்டிருங்கள் மகானுபாவனாகிய மயனிடம் சென்று வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு சீக்கிரம் வந்து சேருகின்றேன் என்று மந்திரி பிரதானிகளிடம் விடைபெற்றுக்கொண்டு கால் நடையாய்க் கையில் தனுர்பாணத்தைத் தாங்கிப் புறப்பட்டு மகாமேரு பர்வதத்திற்குச் சென்றார்.

சுலோகம்

ஸ்வயமேவ மஹாவீர்யோ கமனாய மதிம் ததே
கதோமஹமேஹாஷாதிம் த்ருக்வா சாப அஸ்த்தப்ரதாபவார்ன்
ஜகாம சஹசாமேருமேக ஏவமகாபல:

தனியாகத் தாமொருவரே புறப்பட்டுச் சென்ற மகாபுஜபலபராக்ரமசாலியான தேவாங்க முனியானவர் வழியிலுள்ள கார்க்கியமுனிவருடைய ஆசிரமத்தைக்கண்டு அங்குச் செல்லக் கார்க்கியமுனிவர் தேவாங்கமுனிவர் வருவதைக் கேள்வியுற்று எதிர்கொண்டழைத்து வந்து உபசரித்துப் பூஜித்து க்ஷேமலாபங்களை விசாரித்துத் தேவரீர் இவ்வெழியேன் சிறு குடிசைக் கெழுந்தருள என்ன பாக்கியம் செய்தேன் என்று சொன்ன வார்த்தையைக் கேட்டுத்தேவலர் கார்க்கிய முனிவரே? உம்முடைய

கிருபாகடாக்ஷமிருக்க அடியேனுக்கு என்ன குறையிருக்கின்றது தேவரீரும் தங்கள் மாணாக்கர்களும் க்ஷேமமா வென்று வினவ கார்க்கியர் தங்கள் கிருபையால் அனைவரும் க்ஷேமமே தாங்கள் தங்கள் சேனைசயினியங்களை விட்டுத்தனியே புறப்பட்டு வந்த காரணம் என்ன காரியத்தைக் குறித்து எங்குச் செல்லுகின்றீர் என்று வினவிய கார்க்கிய முனிவரைப் பார்த்துத் தாம் வந்த சமாச்சாரத்தையெல்லாம் சாங்கோபாங்கமாகக்கூறி அன்று அவருடைய ஆசிரமத்தில் போஜனமருந்தி அன்றிரவு அங்குத்தங்கி சூரியோதயமாவதற்கு முன்னெழுந்து நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கார்க்கிய முனிவரிடம் செலவு பெற்றுக்கொண்டு போனார்.

சுலோகம்.

தத்ர சௌரஜனீம் நீத்வா இஷ்டாலாபைச தேவல:
க்ருதாக் நிகக்ரிய: ப்ராத: கார்க்கியனுக் ஞாபிதோயயௌ

தேவலமுனிவர் வழியில் அநேக காடு மலைவனம் வனாந்திரங்களையும் அநேக தேசங்களையும் கடந்து போகும்போது ஜனசஞ்சாரமில்லாத ஓர் ஆரண்யத்தை யடைந்தார். அந்த ஆரண்யத்தில் சிங்கங்களும் காடிபுலிகளும் கோநாய்களும் கண்டபேருண்ட பக்ஷிகளும் யானைக்கூட்டங்களும் புள்ளிமான்களும் ஆகாயத்தை யளாவிய அநேக ஜாதி விருக்ஷங்களும் நிறைந்து சூரிய கிரஹணமும் உள்பிரவேசிக்காதபடி அடர்ந்து நெருங்கிய செடிகொடிகளும் பன்றிகளும் காட்டுப்பசுக்களும் வசிக்கின்ற பயங்கரமாகிய ஆரண்ய மார்க்கமாகத் தேவலமுனிவர் வருகின்ற வாசனையைத் தெரிந்துக் கண்களானது அக்கினியைப்போற் பிரகாசிக்க வாலை மேலெடுத்து வீசிக்கொண்டு அஷ்டதிக்குகளும் செவிடுபடும்படியாக வாயைத் திறந்துகொண்டு ஒரு கேசரியனது தேவலமுனிவரை மோசஞ்செய்ய எதிர்ப்பட்டது.

சுலோகம்

ததோகச்சத்ததோ மௌனிமஹாரண்யேதி துஸ்த்தரே
ததஸ்ஸிம்மோமஹாகாயேஜ்ஞாத் வாயுவாதமும்

இந்தப்படிக்குக் கோபாவேசத்துடன் வருகின்ற சிங்கத்தைக்கண்ட தேவலமுனிவர் தம்கையிலிருந்த வில்லை வளைத்து நாணியேற்றிக் குணத்தொனி செய்து அக்கினிச்சுவாலை வீசுகின்ற அதிகுரூரமான பாணங்களைப் பிரயோகித்து பாஞ்சானனத்தின் மேல் விடுக்க அந்த அடிபட்ட மாத்திரத்தில் மிருகேந்திரனாகிய சிங்கமானது மிகுந்த கோபத்துடன் ஆரவாரம் செய்துகொண்டு தம்மை யடிப்பதற்குதிவேகமாக வாயைத் திறந்துகொண்டு பாய்ந்து வருவதைக் கண்டவுடன் தேவலர் அந்தச் சிங்கத்தை அதிசீக்கிரம் பங்கப்படுத்த எண்ணினவராய் குரூரமாகிய வெங்கணைகளைச் சங்கமாக விடுக்க அந்தக் கொடுமை வாய்ந்த அம்புக்கூட்டங்கள் சிங்கத்தின் வாயிற் புகுந்துருவக் கேசரியானது இரத்தத்தைக் கக்கிக்கொண்டு பூமியில் விழுந்தது இப்படிக்கு விழுந்த மாத்திரத்தில் திவ்ய விமானத்தில் ஒரு புருஷசிரேஷ்டன் சுகந்த பரிமள வாசனைவீச ஏமமகுட ஆரகே யூரகடககங்கண சோபிதனாய்த் தோன்றினன்

சுலோகம்,

தேன சிம்மோ கதப்ராண உக்கிரர்ண்ருகிராம் பஹூ
ஸ்ரோத்ர நேத்ராகுஹரை: பபாதாணீதலே
தத: புஷ்பகமாருஹ்ய திவ்யகந்தானு லேபன:
திவ்யஸ்ரக் பூஷணோபேதோ தத்ருலே புருஷோமஹார்ன்

இப்படிக்குத்தோன்றிய புருஷசிரேஷ்டனைத் தேவலமுனிவர்கண்டு அச்சரியங்கொண்டு ஓ! புருஷசிரேஷ்டனே? நீயாவன்?

உன் விருத்தாந்தமென்னவென்று கேட்க அந்தப்புருஷன் உத்தமோத்தமரும் சத்திய வந்தருமாகிய தேவல முனிவரைப் பார்த்து மகானுபாவரே? உம்மால் யான் கோரமாகிய சாபசமுத்திரத்தினின்றுங் கரையேறினேன். உமது தெரிசனத்தால் கிருதார்த்தனாயினேன் என்று கூறிய வாக்கியத்தைக் கேட்டத் தேவாங்க முனிவர் நீயார்? எவருடைய புத்திரன் உனக்குச்சாபம் வந்த வரலாற்றைச் சொல்லக்கடவாயென அந்தயக்ஷன் சொல்லத் தொடங்கினன் (அஹம் குபேரானுசோ யக்ஷோநாம்நாக பிஞ்சல:) ஓ தேவலமுனிவரே? நான் அழகாபுரிக்கரசனாகிய குபேரன் புத்திரன் என்னுடைய பெயர் கபிஞ்சலன் யான் சில யக்ஷர்களுடன் கூடி வேடிக்கையாகக் காட்டிற் சென்று வேட்டையாடி துஷ்டமிருகங்களின் மேல் அம்புகளைவிடுத்து வெம்புலிகளை மடித்துத் திரிந்தேன் அப்பொழுது அந்தவழியாக ஒரு மானானது வந்தது அதைக்கண்டயான் அதனைவதைக்கப் பின் தொடர்ந்து அம்புகளைவிடுத்தேன் அந்தப்புல்வாய் பயந்து ஓடிற்று நானும் அதனைவிடாது பின்தொடர்ந்து என்னிடத்திலுள்ள அதிகௌரவமுடைய திவ்யாஸ்திரத்தைப் பிரயோகித்தேன் அந்தமானானது கௌதமமுனிவருடைய ஆசிரமத்திற்குச் சென்றது அதனைவிடாது நானும் பின் தொடர்ந்து சென்றேன். மகாதபோதனராகியும் நல்லோர்களால் மதிக்கப்பெற்ற எல்லாவிரதங்களிலும் மேலாகிய கொல்லாவிரதங்கொண்ட அந்தமுனிவர் என்னைப்பார்த்து முகம்வேர்த்து அடா? துன்மார்க்கா? அறிவில்லா மூர்க்கா அஹிம்சாபரமோதர்ம: என்ற நீதிவாக்யத்தையுணராதமூடா? குடிகேடா? வனவேடா? அறனறியாமதிகேடா? அடா? இங்குவாடா? என் ஆசிரமத்தில் குழந்தையைப்போலத்திரிகின்ற இந்தமானைபடுத்தாய் பாணங்களைத் தொடுத்தாய் தர்மத்தை விடுத்தாய் அதர்மத்தையடுத்தாய் என் ஆசிரமத்தைக்கெடுத்தாய் என் மனத்திற்கு வருத்தத்தைக் கொடுத்தாய் கோபத்துடன் நீ,

ஆரண்யத்தில் மிருகங்களை வதைத்துத்தின்னும் மிருகேந்திரனா கிய சிங்கமாகக்கடவாயென்று ஜபித்தார். யான் கௌதம முனிவருடைய சாபத்தை யேற்றவனாய் முனிவரைப்பார்த்து சட்குணைஸ்வர்யமுடைய சாதுவாகிய தவசிரேஷ்டரே? அடியேன் மீது கிருபைகூர்ந்து என்குற்றத்தை மன்னித்துச் சாபவிமோசனம் சொல்ல வேண்டு மென்றிறைஞ்ச கௌதமர் அடாதுஷ்டா? ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமான் மானசபுத்திரராகிய தேவல முனிவர் உலகத்தின் மானசம்ரக்ஷணார்த்தம் வருவார் அவரால் உன்சாபம் விமோசனமாகுமென்றுரைத்தார். உடனே யான் சிங்கவடிவமாகி இந்த ஆரண்யத்தில் வாசஞ்செய்து கொண்டிருந்தேன் கண்ணியமிகுந்த புண்ணியவானே? இப்பொழுது உம்மால் என்சாபம் நீங்கிற்று என்று தொழுது தேவல முனிவரிடம் பெற்றுக்கொண்டு தன் பட்டணமாகிய அழகாபுரிக்குச் சென்றான் என்று பிரம்மதேவர் நாரதருக்குக்கூறிய வண்ணம் சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறிப்பின்னும் சொல்லத் தொடங்கினர்.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## ஆறாவது அத்தியாயம்.

### இராக்ஷதசாப விமோஜனம்.

சூதபுராணிகர் சௌனகாதி முனிவர்களைப் பார்த்துக் கூறுகின்றார் ஓ! முனிபுங்கவர்களே! அம்சவாகனராகிய பிரம்மதேவர் நாரதரைப்பார்த்து, இன்னிசைமுனிவனே? கேட்பாயாக பிறகு காவலாகிய தேவல முனிவர் அதிவேகமாக வானகத்தோங்கிய

தருக்களடர்ந்த கானகங்கடந்து ஞானவான்களாற்புகழப் பெற்ற தாகியும் ஈனமற்றதாகவும் விளங்கும் மங்காத கீர்த்திதங்கிய கங்காதீரத்தையடைந்தார்.

சுலோகம்.

ததஸ்ஸ ஸஹஸா தீரோ தேவலோமிதவிக்ரமஹ
அதிக்ரம்யசகாம்தாரம் கங்காமபஜதாதராத்

அந்தக் கங்காநதியானது எப்பேர்ப்பட்ட தென்றால் திரிபுவனத்தையும் பரிசுத்தமாக்கக் கூடியதும் பாவம் என்ற மேகங்களுக்குச் சண்டமாருதம் போன்றதும் சர்வலோக மாதாவாகிய உமாதேவியாருடைய அஸ்தங்களிற்பிறந்ததும் சிவபெருமானுடைய ஜடாபாரத்தில் விளங்கும் பெருமையுற்றதும் பாதாள உலகம் வரைக்கும் வியாபித்துள்ளதும் அநேக ஜலசரங்களால் நிறையப்பெற்றதும் தன்னிடம் வந்து மூழ்குகின்றவர்களைப் புனிதமாக்கத்தக்கதுமாம்.

சுலோகம்.

அஸ்யா சிரவணமாத்ரேண ஜனோநிர்முக்த கல்மஷஹ
யாத்யம்தே வைஷ்ணவம்லோகம் சர்வ சௌக்யாபஹம்த்ருவம்
யாம்பஸ்யேத் பாவனீம்லோகோவ்ருஜினக்னி சிகாம்சுபாம்
ப்ரயாதி பரமம் ஸ்தானம் சந்தக்தவ்ருஜிநேந்தனஹ

தாத்பர்யம்.

மற்றும் அந்த விந்தைமிகுந்த கங்கையை (கங்கேச யமுனை சைவகோதாவரி சரஸ்வதி நர்மதா சிந்து காவேரி) என அதன் நாமங்களை ஸ்மரித்த மாத்திரத்தில் மனிதர்கள் பாவத்தினின்றும் நீங்கிச் சகல சௌக்கியத்தையுமடைந்து பிறகு விஷ்ணு

லோகமாகிய பரமபதத்தை யடைகின்றார்கள். பாவங்களுக்கு அக்கனிச்சுவாலையாய் விளங்குவதும் சுகங்களுக்கு ஆதாரபூதமாயிருப்பதும் ஆகிய அந்தக்கங்கையைப் பார்த்த மாத்திரத்தில் பாவத்தினின்றும் விடுபட்டு பரமபதமடைக்கின்றார்கள் எ-று.

சுலோகம்.

யஸ்யா ஸ்நாயாஸ்த்து புண்யாம்பக் பூரே துரிதகர்ச்சனே
பாதகாந்யதிகோராணி ப்ரஹ்மஹத்யாதி காளிச

தாத்பர்யம்

பாவத்தை நீக்கக்கூடிய அந்த கங்காப்ரவாகமாகிய புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்த புருஷனுடைய பிரம்ம ஹத்தியாதி முதலாகிய பாதங்களை அக்கினியிற் சிவக்கக்காய்ச்சிய இரும்பானது எப்படி ஜலத்தைக் கவளீகரிக்கின்றதோ அதுபோல் கவளீகரிக்கத்தக்கது. எ-று

சுலோகம்.

தஹ்யந்தே ஸ்நாநபானல்யாம் பஹிரம் தஸ்த மோப்ராஜா ஹ
நைக ஜன்மக்ருதம் பாபம் ததோயச்ச கரிஷ்யதே.

தாத்பர்யம்.

இன்னும் அந்தப் பாகிரதியானது ஸ்நாநம் செய்தவர்களின் பாவத்தையும் பானம் செய்தவர்களின் பாவத்தையும் பாஹ்யாந்தரங்களாகிய அஞ்ஞான மனத்தையும் எரித்துவிடும் மற்றும் ஒரு ஜன்மமன்றி அநேக ஜன்மங்களிற் செய்த பாவங்களையும் நீக்கி இனிமேற்பாவம் செய்யாமலிருக்கின்ற ஞானத்தை தரும் எ-று.

## சுலோகம்.

தத்வம்ஸ்யா பிதரஸ்ஸர்வே சகாயோயேத பாந்தவஹ
ஆசார்ய குரவஸ்ஸர்வஸ்வாமினோ எசசம்மதாஹ

## தாத்பர்யம்.

புண்ணிய சொரூபமாகிய அந்தக் கங்காதீர்த்தத்தில் பிதுர் தேவதைகளுக்குத் தர்ப்பனம் செய்த புருஷனுடைய பிதுர்க்களெல்லாம் அவனுடைய வம்சத்திற் பிறந்தவர்களெல்லாம் அவனுடைய சிநேகிதர் பந்துக்களும் ஆசார்யர்களும் சந்தோஷத்திற் கதிகாரிகளாகின்றார்கள் என்று.

அன்றியும் அந்த அழகிய கன்னகையானது அலைகளாகிய தன் கைகளால் பாவவினையிலுழலுகின்றவர்களை நீங்கள் என்னிடம் வந்து ஸ்நானம் செய்து உங்கள் தீவினைகளைத்தீர்த்துக்கொள்வதற்கு வாருங்கள், வாருங்கள், என்றழைப்பதுபோலத்தோன்ற மற்றும் அந்த மந்தாகினியானது கந்தமிகுந்த சுகந்த மலர்களையும் அநேக கனிவகைகளையும் அலைகளானது அடித்துக்கொண்டு வருவதால் பக்த சிரோன்மணிகள் காளகண்டராகிய சந்திரசேகரக்கடவுளைப் பூஜிக்கப் பூஜாதிரவியங்கள் ஏந்தி வருவதைப் போலக் காணப்பட இப்படிக்கு ஒப்பிடற்குரிய அந்தக்கங்காநதியைக்கண்டு இராஜ சிரேஷ்டராகிய தேவல முனிவர் மந்தாகினியில் ஸ்நானம் செய்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துகொண்டு அதி சீக்கிரமாக சர்வோத்தமமாய் விளங்குகின்ற வாமதேவமகாமுனிவருடைய ஆசிர்மத்தையடைந்தார்.

## சுலோகம்.

க்ருதாக்னிக்ரியா ஸ்ரீமான் ப்ரயயெள சர்வதாம்ததஹ
ஆசஸாதஜோவாம தேவஸ்யாஸ்ரம முத்தமம்.

அந்தச்சுந்தரமாகிய ஆசிரமத்தில் தங்கள் ஜாதிப்பகைகளைப் பாராட்டாது புலியும் பசுவும் ஓர் துறையில் நீருந்தவும் மற்றும் புலிகளினுடைய தேகத்துண்டான தினவு தீரமான்கள் தங்கள் கொம்புகளால் தேய்க்கவும் சிங்கக்குட்டிகளானது யானைகளினுடைய மத்தகத்தின் மேல் ஏறி விளையாடவும் கீரியும் பாம்பும் குரூரங்களை விடுத்து விளையாடவும் நீரோடைகளில் காரிகைமார்களின் வதனத்தைப் போல்பது மங்கள் விகசிக்கவும் மற்றுமந்த ஆசிரமத்தைச்சுற்றிலுமுள்ள பூஞ்சோலைகளில் மயிலினங்கள் தங்கள் அழகிய சிறகை விரித்தாடவும் குயிலினங்கள் தங்கள் இனிமை வாய்ந்த சுரத்தில் இன்னிசை பாடவும் வண்டுகளானது புண்டரீகங்களிலுள்ள மதுவையுண்டு திண்டாடிக்களிக்கவும் பெருக்கமுடைய தருக்களெங்கும் புஷ்பவருக்கங்களினால் நிறையப்பெற்று நறுமணங்கமழவும் விளங்குகின்ற அந்த ஆசிரமத்தைக்கண்டு தேவலமுனிவர் அதிக ஆச்சரியமடைந்து வாமதேவ முனிவர் இருக்கும் இடத்தையடைந்தார். அங்கு அநேக பாலக்கர்களால் சூழப்பெற்று வேதவேதாந்தங்களையும் அதன் சாரமாகிய இரகசிய ஞானார்த்தங்களையும் போதித்துக் கொண்டு மகாதேஜசுடன் விளங்குகின்ற களங்கமற்ற மகாசாதுவாகிய வாமதேவ முனிவரைத்தேவல முனிவர் கண்டு மிகுந்த பக்தியுடன் நமஸ்காரம் செய்தார்.

சுலோகம்.

சம்சேவ்யமானம் பஹுபி சிஷ்யை ஸ்வாத்யாயபாடகை:
வேதவேதாந்ததத்வமஞம் பாவனம் வீதகல்மஷம்
சததர்ஸதத: ப்ராக்ஞோ வாமதேவ தபோநிதிம்
ப்ரணம்ய சிரசாபக்த்யா தேவலேர் முனிபுங்கவம்.

வாமதேவ முனிவர் தேவல முனிவர் வருகைக்குச் சந்தோஷித்தவராய் அவருடைய க்ஷேமலாபங்களை விசாரிக்கத் தேவல

முனிவர் வாமதேவ முனிவரைப்பார்த்து அகப்பகைஞர்களாகிய காமக்குரோதாதிகளைக் கடிந்த கண்ய மூர்த்தியே, உம்முடைய தெரிசனத்தினால் யான் கிருதார்த்தனாயினேன். ஓ! மஹாநுபாவரே! நீரும் உம்முடைய மாணாக்கர்களும் சுகமா? உம்முடைய தவமும் யக்ஞ காரியங்களும் சௌகர்யமாக யாதொரு விக்கினமுமில்லாமல் நடந்தேறி வருகின்றனவா? என்று தேவலர் விசாரிக்க வாமதேவ முனிவர் தேவலமுனிவரைப்பார்த்துத் தேவலராஜேந்திரா! நம்முடைய தபங்களும் யக்ஞ காரியங்களும் சௌகர்யமாகவே நடந்தேறியது இப்பொழுது நம்முடைய தவத்திற்கும் முனிகுமாரர்களுக்கும் அநேக இடையூறுகள் உண்டாயின நம்முடைய ஆசிரமத்திலுள்ள மிருகங்களுக்கும் அநேக பாதைகள் ஏற்பட்டன என்ற வாமதேவ முனிவருடைய வார்த்தையைக்கேட்ட அதிபராக்கிரம பார்த்திபராகிய தேவலர் பரிவுடன் பகர்வதாயினார். ஓ, ஞானிகளுடைய குலதீபமே! இந்த ஆசிரமத்தில் உம்முடைய தவத்திற்கு விக்கினம் செய்பவர்கள் இரக்கமின்றிய அரக்கர்களா? அல்லது பூதபேதாளங்களா? மனிதர்களா? அதை சீக்கிரமாகத் தெரிவியும் அவர்களை என் கையிலுள்ள அதி தீக்ஷண்ய பாணங்களால் சங்கரிக்கின்றேன் என்று தேவல முனிவர் சாற்றியதைக்கேட்ட வாமதேவ முனிவர் சந்தோஷித்துச்சாற்றுகின்றார். ஓ! வீரத்தில் சிறந்த தீரராகிய தேவல மகிபரே, இந்த ஆசிரமத்திற்கு நான்கு நாழிகை வழி தூரத்தில் ஜீவர்களை கஷ்டப்படுத்தி நஷ்டமுண்டாக்கும் பிரஷ்டனாகிய ஒரு துஷ்டன் இருக்கிறான் அவன் குண்டிக்கன் என்ற இராக்ஷத பாதகன் மிகுந்த புஜபல பராக்கிரம மிகுந்தவன் இரக்கமென்பதைத் துறந்தவன் கொலைபாதகத்திற் சிறந்தவன் அதிக கர்வம் நிறைந்தவன் அவன் பர்வதத்தின் குகைக்குள் வசிக்கின்றான் அவனைக் கண்டோர் யாவரும்

பயந்து மருண்டோடுவார்கள். அந்தத் துராத்மாவை நமது தபோமகிமையால் தகிக்கலாமாயினும் தவமானது நசிக்குமென்று சாந்தத்தை யவலம்பித்து இருக்கின்றோம். நீர், மகா புஜபல பராக்கிரம சாலியாயிருக்கின்றீர் நஞ்ச மன்னவனாகிய அந்த வஞ்சகனை வாட்டுதல் வஞ்சமல்ல. மனுநீதியின் முறையாகும். ~~அரசர்கள்~~ துஷ்டர்களை நிக்ரகம் செய்யவேண்டியது கடமையானதாலும் பிராமணர்களுக்குற்ற இடையூறுகளை நீக்குதலும் பெரும் புண்ணியமாம்.

சுலோகம்.

நபேந்த்ர ப்ராஹ்மணத்ராணாத் பரோதர்மோ நவித்யதே
ஆர்த்தாநாம் ப்ராஹ்மணாநாம்து துற்பலாம் தபஸ்விநாம்
தத்தம்சேத பயம் ராஜன் பரோதர்ம உதீரிதஹ
ப்ராஹ்மணாம் ஸ்லோகாஷயேத்யஸ்து தஸ்யபுண்ய மனந்தரம்

தாத்பர்யம்.

ஓ! இராஜேந்திரா! பிரம்ம ஞானிகளாகிய பிராமணர்களை இரக்ஷிப்பதைவிட மிகுந்த தர்மமில்லை பாதையுற்ற பிராமணர்களுக்கும் பலயீனர்களுக்கும் தவம் செய்பவர்களுக்கும் அபயதானம் செய்வது தர்மங்களில் சிரேஷ்டமாகிய தர்மம் என்று சொல்லப்படுகின்றது.

ஓ! தேவல பூபாலா! பிராமணர்களை வதைப்பதாலுண்டாகும் பிரம்மஹத்திற்கு மேலாகிய பாதகம் இல்லை. சிவத்தை யுணர்ந்த பிராமணர்களை இரக்ஷிக்கும் புண்ணியத்திற்கு மேலாகிய புண்ணியமில்லை.

சுலோகம்.

லோகேப்ரஹ்ம ஹத்யா பரம்பாபம் நவித்தியதே
பா ரர் பூசுராணாம்து பரம்புண்யம் நவித்யதே

எவன் கோபத்தினால் பாபாத்மாவாய் பரம்பொருளையுணர்ந்த பிராமணர்களுடன் விரோதிக்கின்றானோ அவன் எப்பொழுதும் துக்கத்தையே அடைகின்றான் அவன் அநேக காலம் துக்கக்கரமாகிய நரகத்தை அநுபவிக்கின்றான்.

ஸ்லோகம்.

ப்ராஹ்மணாத்து வேஷியா: பாபாத்சர்வதா துக்கமஸ்னுதே
புக்த்வா நரகம் கோரம்து சயோநிந்த தோவிசேத்று
ஹாரிநின்ற

பிராமணர்களை இரக்ஷிக்கின்ற தர்மவான் இந்த உலகத்தில் சகல சௌக்கியங்களையும் அநுபவித்து மறுமையில் சுவர்க்கலோகம் சென்று சகல போகங்களையும் அடைகின்றான்.

சுலோகம்.

ப்ராஹ்மணான் பாலிததர்மாத்மா புஞ்சானஸ் புநமைஹிகம்
அநுபூய ததோ ராஜர்ன் திவ்யபோகான் த்ரிவிஷ்டயே

புத்திவானாய் ஈஸ்வர பிரீதியாய் வேத வித்தாகிய பிராமணர்களுக்குத் திருப்தி செய்தவன் மறுபிறப்பில்லாமல் நித்யமாகிய பதவியை அடைகின்றான். எந்தக் காரணத்தைக் கொண்டாகிலும் சரி திடப்ரக்ஞையும் ஒழுக்கமும் உடைய பிராமணர்களுக்குத் திருப்தி செய்தவன் சகல தேவர்களையும் திருப்தி செய்தவனாவான் அவனுடைவிஷபத்தில் சகல தேவர்களும் திருப்தியுடையராவார்கள் தேவவித்துவாகிய பிராமணனுடைய அவயவங்களில் சகல தேவர்களும் வசிப்பார்கள் அவனுடைய தேகத்தை ஆஸ்ரயித்து சமஸ்த நதிகளும் புண்ணிய தீர்த்தங்களும் வசிக்கும் வேத வேத்தியனாகிய பிராமணனை பிரதி தினமும் சந்தோஷத்துடன் நமஸ்கரிக்கின் நன்மையடைகின்றான். அவன்

181670

சகல தேவர்களையும் நமஸ்கரித்தவனாகின்றான். அரசனானவன தருமத்தைப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருக்கின்றான். அவன் அவசியம் பிராமணர்களை இரக்ஷிக்கக்கடவன் அதனால் பெரும் புண்ணியத்தை யடைகின்றான்.

9 23:22 N5

சுலோகம்

அஸ்வமேத சகஸ்ராணி கங்காஸ்நாநானி கோடிச
ப்ராஹ்மணானாம் ரக்ஷணஸ்ய கலாநார்ஹந்தி ஷோடசீம்

அதிகமாகக் கூறுவதேன் முக்கியமாகிய சங்கதியை மொழிகின்றேன் ஆயிரம் அஸ்வமேதயாகம் செய்த பலனையும் கங்காஸ்நானம் செய்த பலனையும் சிவநேயச் செல்வர்களாகிய பிராமணர்களை இரக்ஷிப்பதால் அடையலாம் ஆனதால் ஓ தேவ வராஜ சிரேஷ்டா! அந்த மகா பாபியாகிய இராக்ஷதனால் மிகுந்த துக்கத்தை யனுபவிக்கின்றோம் அவ் விராக்ஷதனைத் தங்கள் பாராக்கிரமத்தால் வதைத்துச் சாதுக்களாகிய. எங்களை இரக்ஷிப்பதற்காகவே நீலகண்டராகிய சிவபெருமானிடம் தாங்கள் அவதரித்திருக்கின்றீர். எப்படியாவது தப்பாதரக்களை ஒழிக்கவேண்டும் என்று விப்பிர சிரேஷ்டராகிய வாமதேவ முனிவர் விண்ணப்பம் செய்தார்.

இப்படிக்குக் காமதேவனைக் கடிந்த வாமதேவ முனிவர் வழங்கிய வார்த்தையைக் கேட்ட காவலராகிய தேவல முனிவர் சொல்லுகின்றார் ஓ முனிகபுங்கவரே, உங்கள் குறையை தீர்க்கத் திங்கள் வேணியன் திருவருளை முன்னிட்டு ஆக்கன் உறக்கமடைந்து பங்கப்படுப்படி வெங்கணைகளைச் சங்கமாகத்தொடுத்துக் குண்டகனைச் சண்டனுலகம் சேர்ப்பிக்கின்றேன். நீங்கள் யாதொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை அவ்வரக்கப் பதரைப் புறக்கணித்து வென்று வருகின்றேனென்று வாம

தேவ முனிவரிடம் விடைபெற்று அரக்கன் வசிக்கும் குகையைச் சமீபத்துப்பார்த்தார் பார்த்தமாத்திரத்தில் பயங்கரமுடையதாய் அநேக பிராணிகளினுடைய எலும்புகள் மலையைப் போல் குவிந்து கிடத்தலைக்கண்டு கடுங்கோபங்கொண்டு தேஜசுடன் விளங்குகின்ற தமது அஸ்தத்திலுள்ள வில்லை வளைத்து நாணியேற்றிக் கார்காலத்திடியைப் போல நாணோசை செய்ய அந்தச் சப்தத்தைக் கேட்ட குண்டகனென்ற இராக்ஷதன் சிங்கத்தைப் போல மலைக் குகையினின்றும் வெளியே வந்தான் இப்படிக்கு வந்த அரக்கன் தேவல முனிவரைப் பார்த்தவுடனே சிவந்த கண்களையுடையவனாய் இரத்தம் தோய்ந்த சூலாயுதத்தைக் கைக்கொண்டு தூஷணவார்த்தைகள் விண்டு தேவலமுனிவரை வளைத்துக்கொள்ள தேவலமுனிவர் அதிதீக்ஷண்யமான பாணங்களை அதிவேகமாகப் பிரயோகித்தார். அந்தப் பாணங்களின் அடிபட்டமாத்திரத்தில் மிகுந்த கோபத்துடன் அரக்கன் நெருங்கிவருவதைக் கண்ட தேவலமுனிவர் அக்கினிகான்ற மூன்று பாணங்களைப் பிரயோகித்து அவனைப்பீதிசெய்து மறுபடியும் மூன்று பாணங்களைப் பிரயோகித்து அவன் கையிற்கொண்ட சூலாயுதத்தைக் கண்டித்தார் சூலாயுதமானது துண்டிக்கப்பட்டதால் அரக்கன் வெகு முறுக்காகச் சமீபத்திலுள்ள ஓர் பெரிய விருக்ஷத்தைப் பறித்துத் தேவலமுனிவர்மேல் விடுத்தான் அதைத் தேவலமுனிவர் அம்புகளைத் தொடுத்து அவ்வம்பன் விடுத்த விருக்ஷத்தை சின்னபின்னமாக்கி இராக்ஷதனை நோக்கி அடா! துஷ்டனாகிய இராக்ஷதப்பதரே! இனி சிதராதே! உன் கையிற்கொண்ட சூலாயுதத்தையும் நீ, விடுத்த விருக்ஷத்தையும் ஒரு க்ஷணத்திற் கண்டித்தேன் இனி நீ என்ன செய்ய வேண்டுமென்கிறாய் அதைச்செய் செந்தழல் வளர்க்கும் அந்தணர்களாகிய தவசிரேஷ்டர்களைப் பக்ஷித்து மிகவும் கர்வித்திருந்தாய் உன்னை சிக்ஷிக்க யான் வந்திருக்கின்றேன் உனக்குயாரி

டத்திலும் பயம் தோன்றவில்லை நீ வேண்டிய வரைக்கும் பாப த்தைச் செய்திருக்கின்றாய் உன்னை யிதோ, கும்பிபாகத்துக்கனு ப்புகின்றேன் ஓர் விநாடிக்குள் என் கைபாணத்தினால் உன்கர் வத்தை ஓட்டுகின்றேன் இதோ பாணத்தை வில்லிற் பூட்டுகின் றேன் உன்னை மாட்டுகின்றேன் மாட்டி வாட்டுகின்றேன் என்ற தேவலமுனிவர் மீது அரக்கன் ஓர் பெரிய பாறையை எடுத்தெ றிந்தான் அந்தப் பாரையை தேவலமுனிவர் வஜ்ஜிரத்தைப்போ ன்ற பாணங்களைப் பிரயோகித்து அரக்கனுக் குறக்கமுண்டா கும்படிப் பொடிப் பொடியாகச் செய்து அவனுடைய தேகத்தை அநேக பாணங்களால் நிறைப்பித்தார் குண்டகன் அதிக கோப த்துடன் அடா, மூடா, என் கண்ணிற்பட்டு எங்கே தப்பித்துக் கொள்ளப் போகிறாய் வஜ்ஜிரத்தைப் போன்ற என் நகங்களாக் உன்னைக்கிழித்து உன் உதிரத்தைப் பருகுகின்றேன் என்று ஒரு பாறையை ஏந்தி வருகின்ற அரக்கனைத் தேவலர் நோக்கிச் சிரக் கம்பம் செய்து அதி தீக்ஷண்யமாகிய அஸ்திரங்களைப் பிரயோ கித்து அவன் கையை துண்டித்து மறுபடியும் பாணப்பிரயோ கம் செய்து மற்றொரு கையையும் அறுத்துத்தள்ளினார் இப்பால் இரண்டு கரங்களும் அற்றுவிழ அரக்கன் வாயைத்திறந்து கொடி ண்டு கடிப்பதற்குவர தேவலமுனிவர் ஒரு அர்த்தசந்திர பாண த்தைப் பிரயோகித்து அரக்கனுடைய சிரத்தை யறுத்துத் தள்ளினார்.

சுலோகம்

தம்ஷ்ராயாம் பீடயாம்யே மித்யாயாதோ தராக்ஷஸஹ
அர்த்த சந்த்ரேண தீக்ஷ்னேன தேவலஸ் தச்சிரோஹரத்

அந்த அரக்கனுடைய தலையானது மலைச் சிகரம்போல் பூமியில் விழுந்தது விழுந்தவுடன் ஒரு திவ்ய புருஷனானவன் விமானமேறிப் பத்துத் திக்குகளும் தன் தேஜசால் பிரகாசிக்

கத் தோன்றத் தேவலமுனிவர் கண்டு வியந்து நீர் யார்? என்று
வினவ அந்தப்புருஷன் புகலலாயினன் இராஜேந்தரா? யான் தன்
யனையினேன் உம்முடைய தர்மத்தால் என்சாபம் விமோசனமா
யிற்று சாபம் என்னும் அக்கினியில் அகப்பட்டுக்கிடந்த என்னைத்
தாங்கள் நன்றாய்க் குளிரும்படி செய்தீர் என் விருத்தாந்தத்தை
விரிக்கின்றேன் கேட்பீராக. நான் இட்சுவாகு புத்திரனாகிய விலா
சன் குமாரன் யான் மிகுந்த பராக்ரமத்தை யுடையவன் என்
பெயர் அக்ரதன்வன் யான் விலாசமா புரியென்ற பட்டணத்தை
பரிபாலித்து வருங்காலத்தில் விகடன் என்னும் அரக்கனனவன்
நாடு நகரங்களைப் பாதித்தும் முனிவர்களைப் பக்ஷித்தும் இத்யாதி
குரூரங்களை இயற்றிவந்தான் அவனையான் சங்கரித்துப் பிரஜை
களுக்கு நன்மையுண்டாக்கினேன் அவனுடைய தம்பி கர்கன்
என்பவன் என்னுடன் யுத்தஞ்செய்யச் சக்தியற்றவனாய்க் கபட
மாய் என்னை மோசம் செய்ய எண்ணினவனாய் நம்முடைய மடப்
பள்ளிக்கு மனிதவடிவங்கொண்டு பரிசாரகனாய் வந்து சேர்ந்
தான் இந்தச் சங்கதி சற்றேனும் யான் அறியவில்லை. இப்படியி
ருக்கத் தூர்வாச முனிவர் ஒருநாள் போஜனார்த்தம் கொழுந்து
விட்டெரியும் அக்கியைப் போன்று என் வீட்டிற்குத்தயை
செய்தெழுந்தருளினார் பாபாத்மாகிய அந்த அரக்கன் நரமாமி
சத்தைச் சமைத்து தூர்வாச முனிவருக்கிட அவர் தெரிந்து அக்
கினியைப் போலெரிந்து கோபம் விரிந்து தீச்செயல் புரிந்த ஓ?
இராஜாதமா! நீ? எனக்கு நரமாமிசம் படைத்தபடியால் நீ? மனி
தர்களைத் தின்னும் இராக்ஷதனாகக் கடவாய் என்று ஜபிக்க நிரப
ராதியாகிய யான் மிகுந்த அச்சத்தையுடையவனாய் தூர்வாச
முனிவரை அநேக விதமாகத் தோத்திரம் செய்து சுவாமி? இந்
தச் சாபமானது எப்பொழுது நீங்குமெனக் கேட்க அதற்கவர்
சாக்ஷாத் சிவபெருமான் மானசபுத்திரராகிய தேவலமுனிவர்
மானசம் ரக்ஷணார்த்தம் வருவார் அவரால் உன் சாபம் நிவர்த்தி
யாகும் என்று சாபவிமோசனம் கூறிப் போயினர் உடனே யான்

இராக்ஷத வடிவந்தாங்கி இந்த வேங்கை மரங்களடர்ந்த ஆரண்யத்தில் காருண்யமின்றி அநேக பிராணிகளை வதைத்துத்தின்று கொண்டிருந்தேன் ஓ? பூபாலா? தற்காலம் உம்மால் சாபவிமோசன மடைந்தேன் இதுவேயென் விருத்தாந்தம் என்று சொல்லித் தேவலமுனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு தன் நகரத்தைய டைந்தான் பிறகு தேவலமுனிவர் வாமதேவமுனிவருடைய சந்நிதானமடைந்து அரக்கர்களை வதைத்த சங்கதிகளைக்கூறி வாமதேவமுனிவரால் சத்கரிக்கப்பட்டவராய் அவரிடம் விடைபெற்று அவ்விடம் விட்டுப்புறப்பட்டு மகாமேருபர்வத்தை யடைந்தார்.

ஆறுவது
அத்தியாயம்
முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## ஏழாவது அத்தியாயம்.

### சௌடேஸ்வரி வஸ்திராக்ஷய வரப்ரதானம்.

சுலோகம்.

ததஸ்ய தேவலோதீரோ ஆசாத்யகனகாசலம்
ப்ரவிஷ்யமந்திரம் தஸ்யமயஸ்பா விஸ்வகர்மனை:

நாரதரே? கேட்பீராக.

மிகுந்த தைரிய சாலியாகிய தேவல மகாராஜாவானவர் மேருபர்வதத்திற்குப் போய் விஸ்வகர்மாவின் புத்திரனாகிய மயனுடைய அரண்மனைக்குச் சென்று மயனால் உபசரிக்கப்பெற்றுச் சந்தோஷத்துடனிருக்க மயன் தேவலரைப்பார்த்து இராஜேந்

திரா? தாங்கள் வந்த காரியத்தைத் திருவாய் மலர்ந்தருள் வேண்டுமென அம்மயனுடைய மாதுர்யமாகிய வசனத்தைக்கேட்ட தேவாங்கமகிபர் நான் வஸ்திரம் நெய்வதற்குத் தகுந்த ஆயுதங்களைத் தங்களிடம் சேகரம் செய்துகொண்டு போவதற்கு வந்தேன் தாங்கள் தயார் செய்து தரல்வேண்டுமென மயன் ஒரு க்ஷண நேரத்திற்குள் சேகரித்தான் அ தா வ து வஸ்த்திரங்களைச் சுற்றுதற்காக வஜ்ஜிர வைடூரியங்களிழைக்கப் போதிகைகளமைத் தப்புடை மரமும் வஜ்ஜிரமயமாகிய தந்தங்களால் இரத்தினங்களிழைத்தபலகையும் கருடப்பச்சையால் கீல்களும் அழகு பெற இரத்தினங்களிழைத்துப் பொன்னால் செய்யப் பெற்றக்கத்தியும் இன்னும் நெய்தற்குச் சாதனமாகிய கருவிகளையும் ஏழுபகுதிகளாகத் தயார் செய்து தேவாங்க மகாராஜாவைப்பார்த்து பிரபு, இந்தப்புடைமரம் எவ்வளவு வஸ்திரங்களைச் சுற்றினும் பூர்த்தியாகமாட்டாது இந்த நாடாக்கள் நீர் எண்ணிய மாதிரியெல்லாம் வேலைத்தனம் செய்யத்தக்கவை உலகத்தாரின் மானரக்ஷணை செய்யும் ஓ? புண்ணிய சீலரே இந்தப் பஞ்சவர்ணமான நூல்கள் சுற்றியிருக்கும் தார்களெல்லாம் ஒரே வரிசையாய் வரத்தக்கவை என்று சாமான்களின் சங்கதிகளையெல்லாம் பங்கமில்லாமல் இங்கிதமாகக்கூறித் தேவலமுனிவருக் கொடுக்கத் தேவாங்கமுனிவர் மயன் தந்த சாமான்களைப் பெற்றுக்கொண்டு அவனிடம் பெற்றுத் தன் பட்டிணம் வந்து சேர்ந்து தன் மனதிற்கிசைந்தபடி அநுபந்தம் ஜோடித்தார் என்று சூதபுராணிகர் சவுனகாதிகளுக்குச் சொல்ல சவுனகாதி முனிவர்கள் சூதப்புராணிகரைப்பார்த்துக் கேட்கின்றார்கள்.

சுவாமி? தேவலமுனிவரே அநுபந்தங்களை யெல்லாம் ஜோடித்ததாரென்று கூறினீர் அநுபந்தங்களை மயன் என் ஜோடித்துத்தரவில்லை? அநுபந்தம் ஜோடிப்பது அருமையான

காரியமன்றோ? சகல வல்லமையுமுடைய தேவலமுனிவர் செய்யுங்கருவிகளுக்காக மயனை வேண்டுவானேன்? தாமே செய்து கொள்ளப்படாதா? இந்தச் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமெனச் சூதபுராணிகர் சொல்லத் தொடங்கினர் ஓ! முனிவர்களே! சிவானுக்கிரகமுடைய தேவலமுனிவருக்கு செய்யுங் கருவிகளையுண்டாக்கச் சக்தியிருப்பினும் சிங்கத்திற்கும் இராக்ஷதனுக்கும் சாபவிமோசனமாக வேண்டியிருப்பதால் மயனிடம் தாம் போகவேண்டுமாய் வந்தது பிரம்ம தேவருக்குச் சமானமாகிய தேவலமுனிவருக்குச் சாத்தியமாகாத காரியம் ஒன்றுமில்லை ஓ முனிவர்களே! இப்படிக்கு எல்லாக் கருவிகளையும் சேகரம்செய்துகொண்டு அந்தத் தேவலமுனிவர் சித்திமுத்தியளிக்கும் உத்தமியாகிய பராசக்தியை சித்தத்தில் மிகுந்த களை பக்தியுடன் தியானித்துத் தோத்திரம் செய்தமாத்திரத்தில் சவுடேஸ்வரி நாமதேயமுடைய சண்டிகாதேவி மிகுந்த பிரீதியுடன் பிரசன்னமாய் அப்பா? தேவலா? என்னை எதற்காக ஸ்மரித்தனை? என்ன காரியம் என்றால் ஆகத்தக்கது? என்று வினவினர்.

சுலோகம்.

அஸ்மாஸ் ஸண்டிகாம்தேவீம் பக்தியாம் சவுடேஸ்வ
ரீம்ததாம். ஸ்முசமாத்யா பகவதீ தேவலேன மஹாத்மனு
ஆசாத்ய தேவலம் தேவீ பபாஷேப்ரீதிபூர்வகம்
வத்ஸதேவல கிம்கார்யம் வதமே புருஷர்ஷப

மகாதேவியார் இப்படிக்கேட்கத் தேவலமுனிவர் ஓ? மகாதேவி? சர்வலோக நாயகி? பார்வதி? பகவதி? உம்முடைய தெரிசினத்தால் தன்யனுயினேன். உம்முடைய கிருபா கடாக்ஷத்தால் என் மனோபீஷ்டம் நிறைவேறிற்று. ஓ! மனோன்மணி! அடியேன் சிவபெருமான் கட்டளைப்படி வஸ்திரம் நிர்மிக்க வேண்டும். அடியேன் செய்யும் வஸ்திரம் கொடுக்கக் கொடுக்க

மாளாமல் அக்ஷயமாய் வளரவேண்டும். அடிமை மூன்று லக்கத்தாருக்கும் வஸ்திரம் கொடுக்கவேண்டும். அவரவர்கள் கோரிய படிக்கு வஸ்திரம் அமையவேண்டும். இந்த வரம் அடியேனுக்குக்கடாக்ஷிக்கவேண்டும். என தேவாங்க முனிவர் கேட்க சவுடநாயகியார் மிகுந்த பிரியத்துடன் தேவலா! நீ! கோரியபடி வரம் தந்தோம். என்று தமதிடத்திலுள்ள கங்கணம் ஒன்று கொடுத்துத்தேவலா! இதைக் கையிற்றரித்துக்கொண்டு வஸ்திரம் செய்ய கடக்கடவாய் ஒவ்வொரு வர்னத்திலும் ஒவ்வொரு வஸ்திரம் நெய்வாயாக. அது ஒவ்வொன்றும் அக்ஷயமாய் வளரும் நீ எப்பேர்ப்பட்ட வஸ்திரம் நெய்யினும் அது அக்ஷயமாகவேயிருக்கும் மச்சத்திற்காக இரசுத்திற்கொவ் வொன்றே நெய்வாயாக. என்று தேவாங்க மகாமுனிவருக்குக் கங்கணந்தந்து அங்ஙனே சவுடாம்பிகையார் அந்தர் தியானமாயினர்.

சுலோகம்.

இதமத் கங்கணம் திவ்யம் பிப்ராண ஸ்வகரேணக
வபவஸ்திராணி கௌசல்யான் நானாவர்ணனிமானத
ஏகைகஸ்ய சவர்ணஸ்ய சைகைகம் வயயந்தஹ
அக்ஷயாணி பவிஷ்யந்தி தானிசர்வாண்ய சம்சயஹ
ரீத்யாபேக்கிருதே வஸ்த்ரே அக்ஷயம்தத்பவிஷ்யதி
இத்யுக்த்வாசா மகாதேவீதத் வாகங்கணமாதாத்

ஸ்ரீகைலாசபதியின் இடப்பாகத்துற்ற இறைவியாகிய அம்பிகையார் வஸ்திராக்ஷய வரமளித்துச் சென்றவுடன் தேவல முனிவர் நல்ல சுப முகூர்த்தத்தில் அநேக வேதவித்துக்களாகிய பிராமணர்களை அழைத்துத் தக்ஷிணை கொடுத்து ஸ்ரீமத் சவுடாம்பிகை யளித்த கங்கணத்தை இங்கிதமுடன் கையிற்றரித்துக் கொண்டு அழகிய வஸ்திரம் நெய்தார்.

ஏழாவது அத்தியாயம், முற்றிற்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## எட்டாவது அத்தியாயம்.

### தேவாங்க தேவலோக வஸ்திரப்ரதானம்.

தேவலமுனிவர் நானாவர்னமான வஸ்திரங்களும் கண்களைமைத்து நெய்தனவான வஸ்திரங்களும், அன்னப்பக்ஷியமைத்து நெய்த ஆடைகளும், சந்திரன்போலவும், நக்ஷத்திரம்போலவும் குறிகள் வைத்து நெய்த சேலைகளும், கலைமான் காண்டாமிருகங்களமைத்தக் கலைகளும், வாசிகளமைத்து நெய்த தூசுகளும், இன்னும் கண்டவுடன் கண்களைக் கவரத்தக்க கனகாம்பரங்களும், பங்கஜ நயனங்களையுடைய வனிதையர்கள் திருஷ்டியிற்பட்ட மாத்திரத்தில் தங்கள் நாயன்மார்களிடம் பிணங்கிக்கொண்டு அந்தசேலையை வாங்கித் தந்தாலல்லாமல் இணங்கமாட்டார்கள். இத்தகைய அநேக விதமாகிய வஸ்திரங்களைச் சேகரித்துக் கொண்டு புண்டரீகாக்ஷனாகிய ஸ்ரீமந்நாராயணர் வாசஸ்தலமாகிய வைகுந்த நகரஞ்சென்று விஷ்ணுவுக்குப் பீதாம்பரமும் ஸ்ரீமகாலக்ஷுமிக்குச் சுவேதாம்பரமும் ஸ்ரீ பூதேவிக்கு இரக்தாம்பரமும் கொடுத்தார்.

சுலோகம்.

பஹூந்யாதாய குசலீஜ காமஹரிசந்நிதிம்
தத்தவார்ன் ஹாரயோரம்யம் பீதாம்பரமதாதராத்
சும்ரந்து கூலம் சுஸ்னிக்ர்தம் லக்ஷ்மியை தத்வாமஹாமதி
வசும் தராயை ருசிகரம் தத்வர சௌரக்தவம்ஹாம

இன்னும் அந்த பத்மநாபனுடைய பரமபதத்திலுள்ளவர்களுக்கு அவரவர்களுக்கு வேண்டிய வர்ணங்களையுடைய வஸ்திரங்களைக் கொடுத்துச் சுவேதத்விபத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவா

களுக்கு அவரவர்கள் மனோபீஷ்டப்படிக்கு வேண்டிய வஸ்திரங்களைக் கொடுத்தார். அவர்களும் தேவாங்க முனிவருக்கு அநேக வஸ்து வாகனாதிகளைக்கொடுத்து அதிகப் பிரீதியுடன் உபசரித்தனர். ஸ்ரீமந் நாராயணரும் தேவலமுனிவரை விசேஷமாக கௌரவிக்க அவரிடம் விடைபெற்று அவ்விடம் விட்டுப் புறப்பட்டுச் சத்திய லோகத்திற்குச்சென்று சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவருக்கு இரக்தாம்பரம் (சிகப்பு வஸ்திரம்) தந்து சரஸ்வதிக்குச் சுவேதாம்பரம் (வெள்ளை வஸ்திரம்) கொடுத்துச் சாவித்திரி தேவியாருக்குப் பீதாம்பரம் (சுவர்ணவஸ்திரம்) நல்கி ஸ்ரீ காயத்திரி தேவியாருக்குச் சிகப்பு வஸ்திரம் கொடுத்துப் பிரஜாபதிக்கு வெள்ளை வஸ்திரமும் புலஸ்தியருக்குப் பச்சை வஸ்திரமும் இன்னும் அங்குள்ள கந்தர்வர் கின்னரர் சித்தர் சாத்தியர் சாரணர் முதலானவர்களுக்கு அவரவர்கள் கோரிய வஸ்திரங்களைக்கொடுத்தார்.

சுலோகம்.

சத்யலோகம் ததோகத்வா ப்ரஹ்மணேலோககாரணே
ரக்தம் தத்வா சாஸ்வத்யை தவளம் திவ்யமம்பரம்
பீதம் வஸ்த்ரம் சாவித்திரியை காயத்திரியை ரக்தாம்பரம்
ப்ரஜாபதேஸ்து தவளம் புலஸ்தியஸ்யது ஹாரிதம்
கந்தர்வாகின்னரா சித்தா சாத்யா சைவமஹர்ஷய:
சாரணாத்யாஸ்சயே தத்ரஸ்திதாஸ் தேஷாம் மஹாத்மனாம்

பின்பு பிரம்மதேவரை நமஸ்கரித்துத் தேவலமுனிவர் சொல்லுகின்றார். சுவாமி? இனிமேல் என் வம்சத்தார் நெய்வதற்கு நூல் கிடைக்கும்படி அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று கேட்க: சாஸ்வதி கேள்வராகிய சதுராननர் சாற்றுகின்றார்.

சுலோகம்.

இமேமான்ய பிமானீதி விஷ்ணு நாபிஸ்திதேஸ்திரீயே
ஸாவராஸ் சபவிஷ்யந்தி தந்து சந்தான காரணம்:

தேவலா! உன் வம்சத்தார் அனைவருக்கும் நூல் கிடைக்கும்படியான உபாயம் சொல்லுகிறேன். விஷ்ணுவினுடைய நாபிக் கமலத்தில் மானி, அபிமானி, என்னும் இரண்டு ஸ்திரீகள் பிறந்திருக்கின்றார்கள். அவர்கள் முதல் முதல் பூமியில் பருத்திச் செடிகளாய்ப் பிறப்பார்கள் அந்தச் செடிகளின் மூலமாக நூல் கிடைக்கும் என்று பிரமதேவர் சொல்லிய வார்த்தையைக் கேட்ட மகாயோக்கியவானாகிய தேவாங்க முனிவர் சந்தோஷத்துடன் அன்னவாகனனிடம் நன்னயமாக விடை பெற்றுப் பொன்னுலகமாகிய சுவர்க்கலோகஞ்சென்று அங்கு அநேக தேவர்களுடன் விளங்கும் தேவேந்திரனுக்குச் சிகப்பு வஸ்திரமும் அவன் மனைவியாகிய இந்திராணிக்குப் பீதாம்பரமும் கொடுத்து இந்திரன புத்திரனாகிய சயிந்தவனுக்குத் தவளாம்பரம் (வெள்ளைவஸ்திரம்) கொடுத்தார்.

சுலோகம்.

ஸ்வர்க்கம் கத்வாமஹேந்திரஸ்யாக்தவஸ்திரம்ததௌந்ருப:
சஸ்யா பீதாபரம் தத்வா சயந்தஸ்ய தாவளம்

மற்றுமங்குள்ள அஷ்டவசுக்களுக்கும் பன்னிரண்டு சூரியர்களுக்கும் பதினொரு உருத்திரர்களுக்கும் அவரவர்கள் வேண்டிய வஸ்திரம் கொடுத்து பிரம்ம ரிஷிகளுக்கும் தேவரிஷிகளுக்கும் மற்ற தேவர்களுக்கும் அவரவர்களின் மனோபீஷ்டமாகிய ஆடைகளைத்தந்து கந்தர்வர்களுக்கும் அங்கவஸ்திரமளித்தார்.

### சுலோகம்.

வசூணாம் தத்ர சாஷ்டாணாம் ஆதித்யாணாம் ததைவச
ருத்ராணாமுக்கிர மூர்த்திணாம் ஸயமேதஸ்திதம்
கந்தர்வாணாம் மஹாக்ஞானி சதௌவஸ்த்ராணி தேவலஹ.

மற்றுமந்தத் தேவர்களால் அநேக வஸ்து வாகனாதிகள் கொடுக்கப் பெற்றுக்கொண்டு அங்குள்ள அப்சர ஸ்திரீக்களுக்கும் அவரவர்களுக்கு வேண்டிய வஸ்திரங்களைக் கொடுத்து அவ்விடம் விட்டு மகாமேரு பர்வதம் சென்று அங்கு வசிக்கும் தேவர்கள், வித்தியாதரர், கந்தர்வர், சித்தர், சாரணர், கின்னரர், கிம்புருடர், யக்ஷர்கருடர், முனிவர் முதலானோர்களுக்கு வெள்ளை சிகப்பு, பச்சை, ஊதா மஞ்சள் முதலிய நிறங்களையுடைய அநேக வஸ்திரங்களை வழங்கி அவர்களால் அநேக ஆபரணாதிகள் வாகனாதிகள் பெற்றுக்கொண்டு அவ்விடம் நீங்கி மயேந்திர பர்வதம் சென்று அங்குள்ளவர்களனைவர்க்கும் ஆடையீந்து அங்கிருந்து புறப்பட்டு மலயாத்திரைக்குப் போய் அங்குள்ளவர்களுக்கு வஸ்திரங்கொடுத்துச் சவ்வியபர்வதத்திற்குச் சென்று அங்குள்ள கின்னரர்களுக்கு அநேக திவ்யாம்பரங்களீந்து அங்கிருந்து இமய பர்வதஞ்சென்று அங்கு வசிப்பவர்களை ஆடைகளாலலங்கரித்து அவ்விடம் நீங்கி ருக்ஷவந்தனம் என்ற பர்வதத்திற்குச் சென்று அங்குள்ள வித்தியாதரர்களுக்கு வேண்டிய வஸ்திரங்களீந்து பாரிஜாதபர்வதத் திற்கேகி அங்குள்ள கந்தர்வ சமூகங்களுக்கு வஸ்திரம் வழங்கி அங்குள்ள முனிவர்கள் வேடர்கள் முதலானவர்களுக்கும் ஆடையீந்து அக்கினிஹோத்திர முனி பட்டணத்திற்குச் சென்று அக்கினி பகவானுக்குக் கருப்பு வஸ்திரங்கொடுத்து அவரால் சன்மானிக்கப் பெற்று எமபட்டணம் சென்று எமதர்மனுக்குக் கருப்பு வஸ்திரங்கொடுத்து அவன் பக்தர்களுக்கும் கருப்பு வஸ்திரங்கொடுத்து அங்கிருந்து நிருதி

பட்டணம் சென்று நிருதிக்குப் பீதாம்பரமீந்து அவ்விடம் விட்டுப்புறப்பட்டு வருணலோகஞ்சென்று வருண பகவானுக்குத் தவளாம்பரங்கொடுத்து அவ்விடம் உள்ளவர்களை வஸ்திரதானத்தினால் சந்தோஷப்படுத்தி வருணனால் கொடுக்கப்பெற்ற இரத்தினாபரணங்களைக்கொண்டு வாயுலோகஞ்சென்று வாயு தேவனுக்கு பச்சை வஸ்திரங்கொடுத்து அவனிடம் விடை பெற்றுக் கொண்டு அழகாபுரிக்குச் சென்று தனபதியாகிய குபேரனுக்கு விசித்திர வர்ணங்களுள்ள வஸ்திரம் கொடுத்து நளகூபமணிக்ரீவர்களுக்குத் திவ்யாம்பரங்களீந்து குபேரனால் கோடிசூரியப் பிரகாசமுள்ள கிரீடமும் இரத்தின குண்டலங்களும் இன்னும் அநேக ஆபரணங்களும் தரப்பெற்று அவனால் கௌரவிக்கப்பட்டு அங்கிருந்து ஈசானனிடம் போய் ஈசானனுக்கு வெள்ளை வஸ்திரமீந்து அங்குள்ள பூதகணங்களுக்கும் வேண்டிய வஸ்திரங்களைக் கொடுத்து அவர்களால் சன்மானிக்கப்பெற்றார். இப்படிக்குத் தேவர்களுடைய அங்கங்களை வஸ்திரங்களால் அலங்கரித்த படியால் தேவாங்க முனிவர் என்ற காரணப் பெயர் பெற்றார்.

சுலோகம்.

திவ்ய வஸ்த்ரோலங்குருத்யா தேவாங்கானிமஹாயசஹ
தேவாங்க இதிவிக்யாதோ தேவலோ முனிசத்தமஹ

——— எட்டாவது அத்தியாயம் முற்றிற்று. ———

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## ஒன்பதாவது அத்தியாயம்.

### தேவாங்க மத்யபாதாளலோக வஸ்திரப்பிரதானம்.

பிறகு இராஜரிஷியாகிய தேவலமுனிவர் பூலோகத்திற்கு வந்து பிருகு சக்கிரவர்த்தியினால் பரிபாலிக்கப்பெற்ற ஜம்புத்தீவி

லுள்ள வஜ்ஜிரபட்டணத்தில் பிரவேசித்து பிருகு சக்கிரவர்த்திக்கும் மற்றுமங்குள்ளவர்களுக்கும் யதேஷ்டமாக வஸ்திரம் கொடுக்க அந்தச் சக்கிரவர்த்தியானவர் தேவாங்க முனிவருக்கு அநேக வஸ்து வாகனாதிகளைக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு பிலக்ஷத் தீவிற்குப் போய் சூரசேனன் என்ற அரசனுக்கும் அந்தப் பட்டணத்திலுள்ளவர்களுக்கும் அவரவர்களின் மனோபீஷ்டப்படி வஸ்திரங்களீந்து அவர்களால் கௌரவிக்கப்பட்டுக் கொடுத்த இரத்னாபரணவாகனாதிகளைப் பெற்றுக்கொண்டு குசத் தீவிற்கும் சென்று குசியென்ற அரசனுக்கும் அவன் பிரஜைகளுக்கும் வஸ்திரங்கொடுத்து அவர்களால் சன்மானம் பெற்று அவ்விடம் நீங்கிக்கிரவுஞ்சத்தீவிற்குச் சென்று ஏமாட்சன் என்ற அரசனுக்கும் அவன் பிரஜைகளுக்கும் நானாவித வஸ்திரங்கள் வழங்கி அவர்களிடம் அநேகதிரவியங்களும் இரத்னாபரணங்களும் மதம்பொழிகின்ற யானைகளும், பாய்ந்து செல்லும் குதிரைகளும் பெற்றுக்கொண்டு சாகத்தீவிற்குச் சென்று அபிராமன் என்ற அரசனுக்கும் அவன் குடிகளுக்கும் வேண்டிய வஸ்திரங்களைக் கொடுத்து அவன் பிரீதியுடன் கொடுத்த இரதம் வாகனம் பல்லக்கு ஆபரணம் முதலானவைகளைப் பெற்றுக்கொண்டு அவ்விடம் நீங்கி சான்மலித் தீவிற்குச்சென்று சாலிஹோத்திரனுக்கு வேண்டிய வஸ்திரங்களைத் தந்து அவனால் கொடுக்கப்பட்டவைகளைப்பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப் புஷ்கலத்தீவிற்குச்சென்று பானுமந்தன் என்ற இராஜனுக்கும் அங்குள்ளவர்களுக்கும் சொகுசான அம்பரங்களீந்து அவ்வரசனால் கௌரவிக்கப்பட்டு கொடுக்கப்பட்ட வஸ்து வாகனாதிகளைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் ஜம்புத் தீவிற்குவந்து ஜம்புதீவிலுள்ள அங்க வங்க கலிங்க காஸ்மீர தேசாதிபதிகளுக்கு வஸ்திரங்கொடுத்து அவர்களால் கொடுக்கப்பட்ட தேர்கள், யானைகள், குதிரைகள்,

சுவர்ண பூஷணாதிகள், முத்துமாலைகள், இரத்தினங்கள், பசுக்கள் தாசிதனங்கள் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு அந்த தேவாங்கமுனிவர் பரமானந்தபரிதராய் ஜம்புத்தீவிலிருக்கும் நான்கு வருணத்தார்களுக்கும் அவரவர்கள் வேண்டியபடி வஸ்திரங்களைக்கொடுத்துச் சந்தோஷிக்கச் செய்தார்.

அந்தப்பிரமுகர்கள் கொடுத்த வஸ்து வாகனாதிகள் அளவிறந்தன வாயினும் ஒருவாறு அதன் கணக்கைச் சொல்லுகிறேன். ஒருகோடி இரத்தினங்கள் இரண்டுகோடி பண்டிகள் இரண்டுகோடி மதயானைகள் நான்குகோடி குதிரைகள் ஒருகோடி சிவிகை பத்துகோடி தாசிகள் முப்பது இலக்ஷம் காலாட்கள் முதலிய சதுரங்க சேனைகளை ஆமோதப் பட்டணத்திற்குப் போகும்படி அனுப்பி வைத்துத் தாம் பாதாளலோகத்திற்குச் சென்றார். அங்குச் சர்ப்பங்களில் படங்களிலுள்ள நாகரத்தினங்களின் காந்தியாலும் நாககன்னியர்களாலும் பிரகாசிக்கப்பெற்று விளங்கும் பாதாளலோகத்திற்கரசனாகிய வாசுகியிடஞ்சென்று வாசுகிக்கு நானாவர்ணமாகிய வஸ்திரங்களைக்கொடுத்து சித்திரசேனனுக்குத் திவ்வியமான கலைகளை நல்கி தக்ஷனுக்குச் சிகப்பு வஸ்திரமும் கருப்பு வஸ்திரமும் கொடுத்து அயிராவதனுக்கு வெள்ளையாடையீந்து சௌரபேயனென்ற சர்ப்பத்திற்குப் பீதாம்பரங்கொடுத்து மற்றுமுள்ளவர்களுக்கு அவரவர்கள் விரும்பிய வஸ்திரங்களைக்கொடுத்தார் வாசுகி முதலானவர்கள் தேவாங்கமுனிவருக்கு அநேக நாகரத்தினங்களைக்கொடுத்தார். மற்ற நாகோத்தமர்களும் அவரவர்களுக்குண்டான இரத்தினங்களையீந்து தேவாங்க முனிவரை நமஸ்கரித்தார்கள். பிறகு ஆதிசேஷன் இருக்குமிடத்திற்கு தேவலர் சென்று அவனுக்கு நானாவர்ண வஸ்திரங்கொடுத்து மற்ற நாககன்னிகைகளுக்கும் அவரவர்கள் மனோபீஷ்டப்படி வஸ்திரங்களைக்கொடுத்தார். திருதராஷ்டர்ன் என்ற சேஷனுடைய மந்திரிக்

கும் அவன் மனைவிமார்களுக்கும்வேண்டிய வஸ்திரங்களைத் தந்து நாகலோகத்திலிருக்கும் நாகர்களனைவர்களுக்கும் ஏதேஷ்டமாய் வஸ்திரதானம் செய்து அவர்களால் வெகுமானமாகக் கொடுக்கப் பட்ட அநேக இரத்தினங்கள் பூஷணங்கள் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு சந்தோஷித்திருந்தனர். பிறகு ஆதிசேஷன் தேவாங்க முனிவரிடத்திலுண்டான அத்தியந்த பிரியத்தினால் தன் அருமை புதல்வியாகிய சந்திரரேகையை விவாகம் செய்து கொள்ளுமாறு வேண்ட தேவல முனிவர் ஆதிசேஷனுடைய பிரிய வசனத்திற்கிணங்க ஆதிசேஷன் தன் பட்டணத்தைப் பொன் னுலகமும் பின்னிடும்படி அலங்கரித்து வீதிகள் தோறும் இரத் தினத் தோரணங்களும் பூரண கும்பங்களும் நிறைத்து வாழை மரங்களும் பாக்கு மரங்களும் அலங்காரமாக நாட்டி கல்யாண மண்டபம் நாகரத்தினங்களாலமைத்து நல்ல சுபமுகூர்த்தத்தில் தன் புத்திரரத்தினமாகிய சந்திரரேகையை தேவாங்க முனிவ ருக்கு விவாகம் செய்துகொடுத்தார்.

சுலோகம்

சந்த்ரரேகேதி விக்யாதாம் தேவலாயதமெதஸ்முதா
தாம்ஸ்வீக்ருத்திய ததஸ்லேஷாத் தேவலப்ரீதி பூர்வகம்

பிறகு தேவல முனிவர் நாக ராஜனாகிய ஆதிசேஷனால் கொடுக் கப்பெற்ற இரத்தினங்கள் முதலாகிய காணிக்கைகளை ஏற்றுக் கொண்டு அவர் குமாரத்தியை அழைத்துக்கொண்டு பூலோகத் திற்கு வந்தார். இப்படி மூன்றுலகத்திற்கும் மானசம்ரக்ஷணை செய்து தன் தேசத்திலுள்ளவர்களுக்கும் அநேகவிதமான வஸ்தி ரங்களைக் கொடுத்தார். தேவாங்கமுனிவருடைய மந்திரிமார்கள் பிரதானிகள் பிராமணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர் கள் முதலாயினவர்களும் தங்கள் அரசனால் அளிக்கப்பெற்ற வஸ்

திரங்களைத் தரித்துக்கொண்டு அளவில்லாத சந்தோஷத்தை அடைந்தார்கள். இந்தப்பிரகாரம் தேவாங்க மகாராஜாவானவர் மூன்றுலகத்தார்களுக்கும் வஸ்திரங்கொடுத்து மானரக்ஷணை செய்து கீர்த்திமானாய்ச் சந்தோஷத்துடன் வாழ்ந்திருந்தார்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

:o:

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பத்தாவது அத்தியாயம்.

### தேவாங்க சங்கர வஸ்திரப் பிரதானம்.

### நந்தீத் துவஜ சம்பாதனை.

மகாநுபாவராகிய தேவாங்க முனிவர் தம்மாலியற்றப்பட்ட வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு அமைப்பருக்கடல்விமமுது செய்தருளிய ஆதிபகவனாகிய அம்பிகாபதியை தெரிசிக்கத் திருக்கயிலா பருவதம் சென்றார். அங்கு அனந்தனாலும் வர்ணிக்க அசாத்தியமாகிய அச்சிவலோகத்தைக்கண்டு சந்தோஷித்தாராய் அஷ்டதிக்கும் பிரகாசிக்கச் சுவர்ணத்தினால் கட்டப்பட்ட பிரகாரங்களும் பேராயிரமுடைய பெம்மானை மூந்தருள ஓராயிரமாற்றுயர்தரும் அபரஞ்சியால் அமைக்கப்பெற்ற கோபுரங்களும் சந்திரகாந்தக் கற்களால் நிர்மிக்கப்பட்ட சுந்தரமாகிய கூடங்களும் அதில் உன்னதமாகிய மாடங்களும் சுகந்த பரிமள மிகுந்த தூபங்களின் வாசனைகளும் தீபங்களின் பிரகாசங்களும் ஆகாயத்தை யளாவிய துவஜஸ்தம்பங்களும் பூரண கும்பங்களும் நிறைந்து சந்திர சூரியர்களுடைய காந்தியைத் திரஸ்கரிக்கத்தக்கப் பிரகாசமுடைய ஸ்ரீமத் சங்கரமூர்த்தியின் பவன(கோயில்)த்தைப்பார்த்தார் விந்தை மிகுந்த அந்தத் தேவாலயத்தில் பிரம்மா விஷ்ணு அஷ்டதிக்குப் பாலகர் அஷ்ட வசுக்கள்

ஏகாதச ருத்திரர், துவாதசாதித்தர், சித்தர், சாரணர், கந்தர்வர், நாகர், கின்னரர், கிம்புருடர், கருடர், யக்ஷா, ஜனகாதி முனிவர்கள், சாத்தியர், அப்சர கணங்கள், கஸ்யபர் அத்திரி, பாரதுவல்சர், ஜாபாலி, ஜமதக்னி, வசிஷ்டர், சுகா, ஆரீதர், வாமதேவர் கண்ணுவர், சதாநந்தர், சௌப்பிய கௌதமர், சக்தர், சாண்டில்யல், சிபவசர், உத்தாலகர் பிருகு, அகஸ்தியர், புலஸ்தியா, புலகர் மாரக்கண்டேயர், ஔர்வர், தூர்வாசர் முதலானவர்கள் சேவிக்க பர்வதராஜ குமாரியாகிய பார்வதி சமேதராய் கோடி சூரிய பிரகாச முடையதாய் இரத்தின கசிதமாய் விளங்கும் சிங்காதனத்தில் விக்நேஸ்வரர், சுப்ரமண்யர், வீரபத்திரர் இன்னும் அநேக பிரதம கணங்கள் புடைசூழ சிவபெருமான் திருவோலக்கங் கொண்டெழுந்தருளியிருக்க நந்திதேவர் பொற்பிரம்பைத தாங்கி சாம்பமூர்த்தியின ஆக்ஞையைப் பரிபாலிக்க அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய சிவபெருமானைப் பார்த்து இரண்டு கரங்களையுஞ் சேர்த்து தேவாங்க முனிவர் ஆநந்த பாஷ்பம் பொழிய தேகமானது புளகாங்கிதங் கொள்ள சிவசந்நிதானத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினர்.

சுலோகம்.

சிவாய சங்கராய சின்மயாய சந்த்ரமௌளயே
பவாய பாலலோசனய பஞ்சபாணஹாரிணே
ம்ருடாய பத்தபாலனய புத்திமுத்தி தாயினே
கிரீஸ்வராய சம்பவே நமோஸ்து சூலபாணயே
சுராசு ரேந்த்ர மௌளிரத்ன தீதிதிசடாலசத்
பதாம்புஜாய பார்வதீப்ரியாய மூர்த்தையே
ரவீந்து பாவகேசடினய தகடியஜ் ஞமாகினே
[illegible] கங்கணயதே நமஸ்த்து க்ருத்திவாசசே
ஜகத்ஸ்திதி ப்ரணாஸஸ்ருஷ்டி ஹேதவே த்ரிவிஷ்டயே

181670

# இத்தேவாங்க புராணத்தை ஆதரித்தவர்கள்.

---

திருவாளர் து. அ. செ. இரங்கசாமி தீக்ஷதர், சேலம் குகை.

,, அ. முத்துமல்லிகார்ச்சுன சாஸ்திரியார், கணக்கம்பாளையம்.

,, ரா. நாராயணசாமி செட்டியார், தேவாங்க மித்திரன் பத்திராதிபர் தேவாரம்.

,, தா. வ. சஞ்சீவி செட்டியார், செவ்வாய்ப்பேட்டை சேலம்.

,, எம். கிருஷ்ணபாரதியார், எம்.ஏ., பி.எல்., ஹைகோர்ட்டு வக்கில், மைலாப்பூர், சென்னை.

,, செ. க. ர. சிக்கண்ண செட்டியார், ஜலகண்டபுரம்.

,, வை. சி. சித்தா செட்டியார், குகை சேலம்.

,, கொ. வெ. மு. இலட்சுமணய்யா, உறையூர் திருச்சி.

---

## தேவாங்க புராண வசனம் முதல்பாகம் இரண்டாம் பாகம் வெளிவந்துவிட்டது.

---

தமிழில் கிரந்த சுலோகத்துடன் இனிய நடை தெளிவான பொருள் இந்நூலில் ஸ்தோத்திரங்களுக் குரிய அநேக மந்திரங்களும், அநேக விதிகளும் நீதிகளும், பக்திப்ரதாபங்களும் சிவ சவுடாம்பிகா, காயத்திரி அஷ்டோத்திரங்களும், இன்னும் அநேக அரிய விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

முதல்பாகம் இரண்டாம் பாகம் தனித்தனி விலை அணா நான்குதான்.

5-புஸ்தகம் ஒரே தடவையில் வாங்குபவர்க்கு 1-புஸ்தகம் சேர்த்து அனுப்பப்படும்.

வேண்டுவோர் $8\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்—வீ. தம்மண்ண சாஸ்திரி,
ஜலகண்டபுரம், சேலம் ஜில்லா.

---

இளையான் குடிமாற நாயனர் சரித்திர அம்மானை ஒரு அணா.

# விளம்பரம்.

*நல்ல சமயம்!* *குறைந்த சார்ஜ்!!* *நாணயமான வேலை!!!*

ஐயன்மீர்,

தங்கள் உருவப்படங்களைப் பெரிய அளவிலும் சிறிய அளவிலும் (Photo) புகைப்படம் எடுத்துக்கொள்ள இதுவே சமயம். தவிர, கைக்குட்டை, கார்டு, சில்கு, இவைகளிலும் அவரவர்களுடைய உருவப் படம் எடுக்கப்படும். தவிர சிறிய படங்களைப் பெரிய உருவில் (Bromide-enlargement) ப்ரொமைடு என்லார்ஜ்மெண்ட் எடுத்து அவைகளுக்குப் பலவித கலர் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். தவிர கண்ணாடிகளுக்கு இரசம் போடும் தொழில் வைத்தியத் தொழிலும் பூரண அனுபவம் உண்டு. சார்ஜ் மிக்க குறைவு கனவான்கள் ஒரு முறை பரீக்ஷித்துப் பாருங்கள். உண்மை தெரியவரும்.

குறிப்பு:—ப்ரொமைட் என்லார்ஜ் மெண்டுகள் குறைந்த சார்ஜுக்குச் செய்யப்படும். அன்றியும் லெத்தகிராப் படங்களும் எடுக்கப்படும். என்னுடைய வேலைத் திறமைக்காக அநேக கனதனவான்களிடம் பெற்றிருக்கும் சர்டிபிகெட்டுகளையும் என்னிடமுள்ள படங்களையும் பார்த்தால் உண்மை விளங்கும்.

வைத்திய முறையில். பெரியோர்களால் கையாண்டு வந்த அனுபோகத்தினால் தேர்ச்சி பெற்று ஔஷதங்கள் தயாரித்திருக்கிறேன். தாதுபுஷ்டி நெய். பற்பொடி, உரோமசங்காரி இவைகளைப்பற்றி நான் விஸ்தரிக்க வேண்டுவதில்லை அனுபோகத்தால் தெரியவரும். மற்றவர்களைப்போல புகழ்ந்து எழுதுவதற்கு இஷ்டமில்லை. ஒருமுறை வரவழைத்துப் பார்த்தால் அதன் குணங்கள் தெரியவரும். இச்சமயம் தவறினால் மறுசமயம் கிடைப்பதரிது. பத்தியம் கிடையாது. மருந்து அனுப்பும்போது சாப்பிடும் விபரங்கள் அனுப்பப்படும்; முந்துங்கள்.

மருந்து விபரம்.

| | | |
|---|---|---|
| தாதுபுஷ்டி நெய் 12-நாள் மருந்து | டப்பா 1-க்கு | ரூ. 4-0-0. |
| பற்பொடி ... ... | டப்பா 1-க்கு | ரூ. 0-6-0. |
| உரோமசங்காரி பவுடர் ... | டப்பா 1-க்கு | ரூ. 0-6-0. |

வேண்டிய ஔஷதங்களுக்கு வியாதியைக் குறித்து எழுதினால் தக்க ஔஷதம் அனுப்பப்படும்,

விலாசம்.

J. V. கணபதி அண்டு கோ.,
போடோ ஆர்டிஸ்டு அண்டு நேடிவ் டாக்டர்,
ஜலகண்டபுரம், (சேலம் ஜில்லா)

J. V. GANAPATHI AND Co.,
Photo Artist & Native Doctor,
Jalakandapuram, (SALEM-Dt.)